# இந்திய உயர் ஸ்தானிகராலயம்

# கொழும்பு

****

## ஊடக அறிக்கை

**இந்தியாவில் இளமாணி, முதுமாணி கற்கைநெறிகளை கற்பதற்கான கலாச்சார உறவுகளுக்கான**

**இந்தியப் பேராயத்தின் (ICCR) புலமைப்பரிசில்கள்.**

இந்திய அரசு இந்தியாவின் முன்னணிப் பல்கலைக்கழகங்கள் சிலவற்றில் கற்பதற்குத் தகுதியான இலங்கை மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வருடாந்தம் வழங்குகிறது. அந்த வகையில் கலாச்சார உறவுகளுக்கான இந்தியப் பேராயத்தின் (ICCR) புலமைப்பரிசில்களுக்கான 2022-2023 கல்வி ஆண்டுக்கான விண்ணப்பங்களை கொழும்பு இந்திய உயர் ஸ்தானிகராலயம் கோரியுள்ளது.

- **நேரு ஞாபகார்த்த புலமைப்பரிசில் -** [இந்தத் திட்டம் பொறியியல், அறிவியல், வணிகம், பொருளாதாரம், வணிகம், மானிடவியல் மற்றும் கலை உள்ளிட்ட அனைத்து இளமாணிப் படிப்புகளையும் (மருத்துவம்/ துணைமருத்துவம், ஆடை வடிவமைப்பு & அலங்காரம், சட்டப் படிப்புகள் தவிர) உள்ளடக்கியது.]

- **மௌலானா ஆஸாத் புலமைப்பரிசில் திட்டம் (முதுமாணிப்பட்டம்) -** (பொறியியல், அறிவியல், பொருளாதாரம், வணிகம், மானிடவியல் மற்றும் கலை உள்ளிட்ட முதுமாணிப் பட்டப் படிப்புகள் (மருத்துவம்/ துணைமருத்துவம், ஆடை வடிவமைப்பு & அலங்காரம், சட்டப் படிப்புகள் தவிர). இருப்பினும், பொறியியல், அறிவியல் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

- **ராஜீவ் காந்தி புலமைப்பரிசில்(இளமாணி பட்டப்படிப்பு) -** (தகவல் தொழில்நுட்ப துறையில் இளமாணிப் படிப்புக்கள்)

இந்திய அரசானது இந்தப்புலமைப்பரிசில்களை திறமை அடிப்படையில் இலங்கைப் பிரஜைகளுக்கு வழங்குகிறது. இலங்கை அரசின் உயர்கல்வி அமைச்சின் ஆலோசனையுடன் மேற்படிப் பட்டப் படிப்புக்களுக்கான தெரிவுகள் மேற்கொள்ளப்படும். அனைத்துப் புலமைப்பரிசில்களும் மாதாந்த செலவினக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக பாடநெறியின் காலப்பகுதி முழுமைக்குமான கல்விக்கட்டணத்தையும் உள்ளடக்குகின்றன. அத்துடன் புத்தகங்கள், காகிதாதிகளுக்கான வருடாந்தக் கொடுப்பனவையும் வழங்குகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு வளாகத்திற்குள் விடுதி வசதியும்

வழங்கப்படும். தவிரவும், கலாச்சார உறவுகளுக்கான இந்தியப் பேராயத்தின் புலமைப்பரிசில் பெற்றவர்கள் அனைவருக்கும் இலங்கையிலிருந்து செல்லும் போது இந்தியாவில் மிகக்கிட்டிய விமான நிலையத்துக்கான விமானப் பயணக் கொடுப்பனவு, இந்தியாவின் பல்வேறு இடங்களுக்கான கல்விச் சுற்றுலாக் கொடுப்பனவுடன் மேலும் பல உதிரிக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. கல்வி அமைச்சின் www.mohe.gov.lk என்ற இணையத்தளத்தில் தேவையான மேலதிக விபரங்கள் உள்ளன. விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கான கல்வித் தகைமைகள் மற்றும் தேர்வு நடைமுறை பற்றி மேலும் அறிய, கல்வி அமைச்சகம், இலங்கை அல்லது இந்திய உயர் ஸ்தானிகராலயம், கொழும்பு ஆகியவற்றை அணுகுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

***மார்ச் 02, 2022***

**கொழும்பு**